**ஊடக அறிவித்தல்**

# டெப்லெட்டு (Tablet) கணனியைப் பயன்படுத்தி கணக்கெடுப்பு தொடர்பான தகவல்களை சேகரிக்கும் முறையை ஆரம்பித்தல்

**தொகைமதிப்புப் புள்ளிவிபரவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

**DCS/DG/PRESS** தொலைபேசி: 0112147458 தொலைநகல்: 011-2147447 2016 நவம்பர் 28

தொகைமதிப்புப் புள்ளிவிபரவிபரத் திணைக்களம், பல மட்டங்களிலும் கணக்கெடுப்புகளையும் மதிப்பாய்வுகளையும் நடத்தி வருகின்றது. அத்தகையவற்றின் அடிப்படையிலான தகவல்களினூடாக இலங்கையின் சமூக விஞ்ஞானம், சமூகம் மற்றும் பொருளாதார நிலைமைகளில் உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களை தயாரித்து வழங்குகின்றது. இவற்றினுள் முக்கியமான ஒரு மதிப்பாய்வாக ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் இலங்கையின் தொழிற்பலம் தொடர்பான மதிப்பாய்வை குறிப்பிட முடியும். தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்வாய்ப்பின்மை, தொழிற்பலம் முதலியன பற்றிய பல புள்ளிவிபரங்களின் மேம்பாடு தொடர்பான காலத்திற்கேற்ற தரவுகளை வழங்கும் நோக்கில் சரியான ஒரு மாதிரி முறைமைக்கு இணங்க தேர்ந்தெடுக்கப்பட்ட 25,000 வீட்டு அலகுகளைக் கொண்டு அத்தகைய தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டு முதல் டெப்லெட்டுக் (Tablet) கணனியைப் பயன்படுத்தி, தேர்ந்தெடுக்கப்படும் வீடுகளுக்கு சென்று தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு நேர்காணல்கள் நடாத்தப்படும் நேரத்திலேயே தரவுகளை கணனியமப்படுத்தும் முறையியலாகிய கணனி உதவியுடனான தனிப்பட்ட நேர்காணல் (Computer Assisted Personal Interviewing(CAPI)) முறையை உபயோகித்து இலங்கையின் தொழிற்பலம் தொடர்பான மதிப்பாய்வை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களமும் மற்றும் கொரிய அரசாங்கமும் ஒன்றிணைந்து முன்னெடுத்த ‘KOSTAT’ என்ற கருத்திட்டத்தின் மூலம் இந்த முறையியல் இந்தத் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டது. இந்தக் கரும பணியை முன்னெடுக்கும் உத்தியோகபூர்வ வைபவம் தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் திரு. வசந்த தேசப்பிரிய அவர்களின் தலைமையில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை பத்தரமுல்ல ‘Water’s Edge’ ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

கணனி உதவியுடனான தனிப்பட்ட நேர்காணல் முறையினூடாக (CAPI) தரவுகள் சேகரிக்கப்படுகின்ற நேரத்திலேயே அத்தகைய தரவுகளை கணினிமயப்படுத்த முடியும் என்பதால், திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் உத்தியோகபூர்வத் தகவல்களின் தரத்தையும்

சமயோசிதத்தன்மையையும் மேலும் மேம்படுத்த முடியும் என தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கொரியக் குடியரசின் நிதி உதவியினதும் கொரியாவின் தேசிய புள்ளிவிபரத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியினதும் அடிப்படையில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் 2014 - 2016 வரையான காலப்பகுதியினுள் செயற்படுத்திய இந்த 'KOSTAT' கருத்திட்டத்தின் மூலம், மூன்று கட்டங்களில் இந்தத் திணைக்களத்திற்கு நிதி உதவி கிடைத்துள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 'புள்ளிவிபரத் தரவுகள் முகாமைத்துவ சேவைகள் முறைமை' (Lanka SIS) தாபிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு, பதவியணியினருக்குப் பயிற்சியளிக்கும் வசதிகளை மேம்படுத்துதல் என்ற தலைப்பின் கீழ் நவீன வசதிகளையுடைய இரண்டு கணனி ஆய்வுகூடங்கள் பெற்றுத்தரப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில், திணைக்களத்தினது கணக்கெடுப்பு தொடர்பான விடயங்களை உயர்ந்தளவில் தகவல் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் பொருட்டு டெப்லெட்டு கணனிகள் அடங்கலாக சகல கணனி மென்பாகங்களையும், கற்புலப் பாகங்களையும் மற்றும் ஆலோசனை சேவைகளையும் வழங்குவதற்கும் அதே நேரம் மேற்குறித்த கணனி உதவியுடனான தனிப்பட்ட நேர்காணல் முறையை கள ரீதியில் செயற்படுத்துவதற்கும் தேவையான சகல தொழில்நுட்ப உதவிகளும், நிதி உதவிகளும் பெற்றுத்தரப்பட்டன.

கலாநிதி ஏ. ஜே. சதரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்